"இனிமையான குழந்தைகளே! இரண்டு சொற்களை மட்டும் நினைவு செய்யுங்கள்--நாம் சத்குருவின் பேரக்குழந்தைகள், பிரம்மா என்ற தந்தையின் மூலம் தாத்தாவின் ஆஸ்தியை அடைகின்றோம்.

கேள்வி: மேலே உயர்ந்து சென்றால் வைகுண்ட ரசம் இந்த மகிமை குழந்தைகளாகிய உங்களிடமிருந்து வருவது, மற்றவர்களிடமிருந்து அல்ல - ஏன்?

பதில்: ஏனென்றால் உங்கள் முன் மிகப்பெரிய குறிக்கோள் உள்ளது. நீங்கள் தந்தையுடன் பரந்தாம வீட்டிற்குச் செல்கிறீர்கள். பிறகு புதிய உலகத்தில் வருகிறீர்கள். மற்ற யாருக்குமே இந்த மகிமை இருக்க முடியாது. அவர்களிலும் கூட குறையான பக்குவமடையாதவர்கள் வரிசைப்படி உள்ளனர். மேலும் அவர்களிடம் இலட்சியம் என்பதும் இல்லை. அவர்கள் வைகுண்ட ரசம் என்ன என்பது பற்றிக் கூட அறிய மாட்டார்கள். குழந்தைகளாகிய நீங்கள் மட்டுமே சொல்கிறீர்கள்: நாம் இப்போது அந்த வழிகளின் படி நடந்து செல்ல வேண்டும், இங்கு விழுவதும், எழுவதும் இருக்கும்.

பாடல்: நாம் அந்த வழிகளின் படி செல்ல வேண்டும்....

ஓம் சாந்தி. எப்போது பாடல் ஒலிக்கின்றதோ அப்போது குழந்தைகள் புரிந்து கொள்கின்றனர் நமக்காக இதிலெல்லாம் கூட ஞானம் உள்ளது. அஞ்ஞானி மனிதர்களுக்காக அஞ்ஞானம். ஞானி ஆத்மாவுக்காக ஞானம். புரிந்து கொண்டிருக்கிறீர்கள், நிச்சயமாக மாயாவின் புயல் கீழே விழ வைக்கும். பிறகு ஈஸ்வரனாகிய தந்தை மேலேறச் செய்கின்றார். அதாவது விழுந்து விட்டவர்களுக்கு ஞானம் என்ற சஞ்சீவி மூலிகை தருகிறார். யாராவது காமம் என்ற புயலில் வந்து விட்டால் கீழே விழுந்து விடுகின்றனர். பிறகு கோபம் என்ற புயல் வந்தாலும் கீழே விழ வேண்டியுள்ளது. மேலேறிச் சென்றால் வைகுண்ட ரசம் இப்போது இந்தப் பாடல் உங்களைத் தவிர வேறு யாருக்கும் பொருந்தாது. சந்நியாசிகளுக்கும் கூடப் பொருந்தாது. அவர்களுக் குள்ளும் பக்குவமடையாத சந்நியாசிகள் இருக்கலாம், ஆனால் அவர்களுக்கு எந்த ஒரு குறிக்கோளும் இல்லை. உங்களுக்கோ பெரியதிலும் மிகப் பெரியதொரு குறிக்கோள் உள்ளது. அவர்கள் சாஸ்திரங்கள் முதலியவற்றைப் படித்து வித்வான் ஆகிவிடுகிறார்கள். மற்றப்படி இராஜ்ய பதவி முதலிய குறிக்கோள் எதுவும் இல்லை. ஆனால் இங்கே மிக உயர்ந்த குறிக் கோள் உள்ளது. குழந்தைகள் அறிவார்கள், எல்லையற்ற பாப்தாதா கற்றுத் தருகிறார். மம்மாவும் கற்றுத் தருகிறார், பிறகு குழந்தைகளும் கற்றுத் தருகிறார்கள். நீங்கள் தாத்தாவின் பேரக் குழந்தைகள். அம்ருத்சரில் தாத்தா, பேரக்குழந்தைகள் உள்ளனர். பிறகு இது ஏழாவது தலை முறை, இது இரண்டாவது தலை முறை என்பார்கள். இங்கே பிறகு உங்களுடைய தலை முறை இருக்காது. ஒரு தாத்தா, ஒரு பாபா, ஒரு மம்மா மற்றும் குழந்தைகள். அவ்வளவே! தாத்தா பேரக் குழந்தைகளுக்கு முன்பு வேறெதுவும் சொல்ல மாட்டார்கள். இப்போது இதை நினைவு செய்வதோ மிகவும் சுலபம். நாம் பிரம்மாகுமார் குமாரிகள். பிரம்மா நமக்கு பாபா ஆகிறார். தாத்தா சிவன். அவரிடமிருந்து ஆஸ்தி கிடைக்கின்றது. எவ்வளவு சுலபமான விஷயம்! நாம் தாத்தாவின் பேரக்குழந்தைகள் பிரம்மாகுமார் குமாரிகள். பிரம்மா, சிவபாபாவின் ஒரே குழந்தை. நாம் விஷ்ணு குமாரி.... அல்லது சங்கர்

குமாரி.. என்று சொல்ல மாட்டார்கள். பிரஜாபிதா என்று ஒரு பிரம்மா மட்டுமே சொல்லப்படுகிறார். பாபா மிகவும் சுலபமாகப் புரிய வைக்கிறார். நீங்கள் பிரம்மா குமார் குமாரிகளாக ஆகியிருக் கிறீர்கள்- சிவபாபாவிடமிருந்து ஆஸ்தி பெறுவதற்காக. சிவபாபா சொல்கிறார், இப்படியெல்லாம் யாருக்கேனும் சொல்லிப் புரிய வையுங்கள். சிவபாபாவை அவசியம் நினைவு செய்ய வேண்டும். அவரிடமிருந்தே ஆஸ்தி கிடைக்கின்றது. வேறு யாரையாவது நினைப்பீர்களேயானால் நரகத்தின் ஆஸ்தி கிடைக்கும்--இதுவோ புரிந்து கொள்ள வேண்டிய விஷயம். ஆஸ்தி தந்தையிட மிருந்து அல்ல, தாத்தா விடமிருந்து கிடைக்கின்றது.

சொர்க்கத்தைப் படைப்பவர், ஞானம் தரும் வள்ளல் அவரே ஆவார். சிவபாபா சொல்கிறார், பிரம்மாவின் மூலம். பிறகு இந்த பிரம்மாவும் கேட்கின்றார். பிரம்மாவுக்கும் கூட முதல் மகள் சரஸ்வதி என்பது பாடப்பட்டுள்ளது. பிரம்மாகுமாரி சரஸ்வதி ஜெகதம்பா எவ்வளவு பாடல் பெற்றுள்ளார்! சிவபாபா விடமிருந்து அவர் பிரம்மாவை விட அதிகமாக ஆஸ்தியைப் பெறுகின்றார். அதனால் முதலில் லட்சுமி, பிறகு நாராயணர் எனப் பாடப்படுகின்றது. நீங்கள் அறிவீர்கள், நாம் ஜெகதம்பா மற்றும் ஜெகத்பிதாவின் குழந்தைகளாகிறோம். ஆகவே நாம் ஏன் தாத்தா விடமிருந்து ஆஸ்தியைப் பெற்றுக் கொள்ளக் கூடாது? நாம் பிரம்மாகுமார் குமாரிகள், தாதாக்கள் மற்றும் பேரக் குழந்தைகள். அவ்வளவே. இரண்டாவது மூன்றாவது தலை முறை என்பதெல்லாம் இல்லை. கொள்ளுப்பேரன், அடுத்த தலை முறையின் பேரன் என்பதெல்லாம் இல்லை. தாத்தாவை யாரும் நினைவு செய்ய மாட்டார்கள்? நீங்கள் அறிவீர்கள், நாம் எவ்வளவு நினைக்கிறோமோ அவ்வளவுக்கு விகர்மங்கள் வினாசமாகும். நீங்கள் யாருக்கும் சொல்லிப் புரிய வைக்க முடியும்- சிவ பரமபிதா பரமாத்மா சொர்க்கத்தைப் படைப்பவர். நிச்சயமாக பிரம்மா மூலமாகத் தான் படைக்கின்றார். பிறகு பிரம்மாவின் மூலம் பிரம்மாகுமார் குமாரி களுக்கு சொல்கிறார், என்னையும் ஆஸ்தியையும் (சொர்க்கத்தை) நினைவு செய்யுங்கள். தேகத்தின் அனைத்து சம்மந்தங்களையும் மறந்து விடுங்கள். நீங்கள் இறந்தால் உலகமும் இறந்து விட்டது என்று சொல்லப்படுகிறது இல்லையா! ஆத்மா சரீரத்திலிருந்து தனியாகி விட்டால் எதுவும் மிஞ்சுவதில்லை. தேகத்தின் அபிமானம் நீங்கிவிடுகின்றது. நாம் பாபாவிடம் வந்திருக்கிறோம், பிறகு வெண்மையாக (தூய்மையாக) ஆகிவிடுவோம். இப்போது ஷியாம் (கருப்பு). ஷியாம் மற்றும் சுந்தர் ஆவதற்கான நாடகம் இது. ஆத்மா சுத்தமாக, அழகாக ஆகின்றது. இப்போது ஆத்மாக் களாகிய நீங்கள் இரும்பு யுகத்தினராக ஆகியிருக்கிறீர்கள். ஆகவே சரீரமும் அதுபோலவே உள்ளது. சத்யுகத்தில் நீங்கள் வெண்மையாக இருந்தீர்கள். ஒரு அழகிய பயணி வருகிறார், வெண்மையாக ஆக்குவதற்காக. அவருடைய ஆத்மா எப்போதுமே வெண்மையாக இருக்கிறது. ஒருபோதும் கறை படிவதில்லை. அவர் பிறப்பு-இறப்பில் வருவ தில்லை. எவ்வளவு சுலபமாகப் புரியும் படி சொல்லித் தருகிறார்! பிறகும் கூட அத்தகைய தாத்தாவை மறந்து கைவிட்டு விடுகின்றனர். அதனால் பாபா சொல்கிறார், மூர்க்கருக்குள் மிகப் பெரிய மூர்க்கரையோ, புத்திசாலிகளுக்குள் மிகப் பெரிய புத்திசாலிகளையோ பார்க்க வேண்டு மானால் இங்கே பாருங்கள். மூர்க்கரும் சுலபமான இரண்டு விஷயங்களைக் கூடப் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு மூர்க்கராக உள்ளனர். நாம் ஆத்மா, அவர் நிராகார் பரமாத்மா நம்முடைய தாத்தா. இந்தப்

பிரஜாபிதா பிரம்மாவோ புகழ் பெற்றவர். இவர் மூலமாக சிவபாபா ஆஸ்தி தருகின்றார். பிரம்மாவை விட்டு விட்டார்கள், தாத்தாவையும் விட்டு விட்டார்கள் என்றால் ஆஸ்தியும் இல்லாமல் போய்விடும். பாபா எவ்வளவு சுலபமாகப் புரியும்படி சொல்லித்தருகிறார்! நாம் பிரம்மாகுமார் குமாரிகள். பிரம்மா-விஷ்ணு-சங்கர் சூட்சுமவதன் வாசிகள். அதிலும் கூட பிரம்மாவைப் பிரஜாபிதா என்கின்றனர். சூட்சுமவதனத்திலோ மனித சிருஷ்டி படைக்கப்படுவதில்லை. சங்கர் அல்லது விஷ்ணுவை பிரஜாபிதா எனச் சொல்ல முடியாது. பிரஜை களுக்குப் பிதாவோ நிச்சயமாக இங்கே தான் இருப்பார். பிரம்மாவின் கமல வாய் (வாய் வம்சாவளி) மூலம் பிராமணர்கள் வெளிப்பட்டனர். பிராமணர்களைக் கேளுங்கள்--நீங்கள் யாருடைய வம்சாவளி? இது வெறும் மகிமையாக மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. மற்றப்படி அதுபோல் எதுவுமில்லை.

இப்போது நீங்கள் அறிவீர்கள், பரமபிதா பரமாத்மா பிரம்மா மூலம் தேவதா, சத்திரிய தர்மத்தை ஸ்தாபனை செய்கிறார் என்றால் அதுவும் சங்கமயுகத்தில் தான் செய்வார். சங்கமயுகத்தில் நிச்சயமாக பிராமணர்கள் வேண்டும். கலியுகக் கடைசியில் இருப்பவர்கள் சூத்திரர்கள். குழந்தைகளாகிய உங்களுக்கு எவ்வளவு நன்றாகப் புரியவைக்கப் படுகின்றது! ஸ்ரீமத் புகழ் வாய்ந்தது. ஸ்ரீமத் பகவத்கீதா. அவரிடம் என்ன கேட்க வேண்டும்? ஸ்ரீஸ்ரீ வந்து ஞானம் சொல்லி யிருப்பார். சிரேஷ்டத்திலும் சிரேஷ்டமானவர்களாக ஆக்கியிருப்பார். இப்போது நீங்கள் நடைமுறையில் பி.கே. ஆகியிருக்கிறீர்கள். நீங்கள் சொல்கிறீர்கள், பாப்தாதா, நாங்கள் கல்பத் திற்கு முன்பும் கூட உங்களைச் சந்தித்திருக்கிறோம். நாங்கள் தாத்தாவிடம் எங்கள் ஆஸ்தியை அடைவதற்காக வந்திருக்கிறோம். நல்லது, அதனால் என்னவாக ஆகியிருந்தீர்கள்? சூரிய வம்சமா? அல்லது சந்திரவம்சமா? ஸ்ரீநாராயணரை மணந்தீர்களா? அல்லது ஸ்ரீ ராமரையா? சொல்கிறார்கள், பாபா நாங்களோ ஸ்ரீநாராயணரையே மணப்போம். ஆனால் பிறகு மறந்து போகிறார்கள், யார் அவர்களை இவ்வளவு தகுதியுள்ளவர்களாக ஆக்குகிறாரோ அவரையே மறந்து விடுகிறார்கள். தாத்தாவையோ, தந்தையையோ ஒருபோதும் மறக்கலாகாது. சட்டென்று கைவிட்டு விடுகிறார்கள். நினைவு செய்வதில்லை. ஞானத்தின் இரண்டு சொற்களை தாரணை செய்வதில்லை. நாம் சத்குருவின் பேரக் குழந்தைகள் அல்லது தாத்தாவின் பேரக்குழந்தைகள். நமது முயற்சியின் மூலம் அவரிடமிருந்து ஆஸ்தி பெறுகின்றோம். லௌகிக் தந்தையின் ஆஸ்தியோ சொத்தோ பகிர்ந்தளிக்கப்படுகின்றது. இங்கே பகிர்ந்தளிப் பதற்கான பொருள் இல்லை. இதிலோ முயற்சி செய்ய வேண்டியுள்ளது. சந்திரன் முதலியவற்றில் போய் மனை (இடம்) வாங்க வேண்டாம். இங்கோ இராஜ்யத்தின் எஜமான் ஆகிறீர்கள். இங்கே தான் உங்கள் பாகத்தை நடித்தாக வேண்டும். சந்திரன் முதலியவற்றிற்குச் செல்ல வேண்டாம். இது அறிவியல் கர்வம் எனப்படுகின்றது. அதிக கர்வத்தில் போகும்போது வினாசத்தை அடை கிறார்கள். என்னென்னவெல்லாம் வெளியாகியுள்ளது! ஆயிரம்-லட்சம் மைல்கள் வரை செல் கின்றனர். இப்போது இது எதுவரை சென்றடைந்துள்ளது என்பது அவர்களுக்குத் தெரிந்திருக் கிறது. மேலே நிலாவில் என்ன இருக்கிறது? நிலாவோ குளிர்ச்சியானது இல்லையா? சூரியனுக்கு முன்னால் போவார்களானால் எரிந்து போவார்கள். எவ்வளவு அறிவியல் கர்வம் உள்ளது! பெயரும் ராக்கெட் என வைக்கப்பட்டுள்ளது. பாபா சொல்லியிருக்கிறார், ஆத்மா

அனைத்தையும் விடப் பெரிய ராக்கெட். அது ஒரு பிந்தியாக (புள்ளி) மட்டுமே உள்ளது. அதன் எடை என்னவாக இருக்கும்? புள்ளியில் எவ்வளவு ஞானம் முழுவதும் அடங்கியுள்ளது! ஒரு வினாடியில் எங்கிருந்து எங்கே பறந்து விடுகின்றது! பாபாவை நினைவு செய்தவுடனே ஒரு வினாடியில் பறந்து விடுகின்றது. இதையும் கூர்மையான புத்தியுள்ளவர்களே புரிந்து கொண்டு மற்றவர்களுக்குப் புரியவைக்க முடியும். சிவபாபாவும் பிந்தி தான். லிங்க சொரூபம் என்றால் இவ்வளவு பெரியதாக ஆத்மா இருப்பதில்லை என்பார்கள். பரமாத்மாவும் அதுபோல் இருப்பதில்லை. அவர்கள் பிறகு பரமாத்மாவோ பிரம்மம் என்று சொல்கிறார்கள். கொஞ்சம் கூடப் புரிந்து கொள்ள முடிவதில்லை. எதுவரை முன்பாக (நேராக) வரவில்லையோ அதுவரை பரமாத்மாவின் பெயர், வடிவம் முதலியவை பற்றிப் புரிந்து கொள்ள இயலாது. நாம் சிவபாபாவின் சித்திரத்தைக் காட்டுகிறோம், ஆனால் இதுபோல அவர் இல்லை. அவரோ பிந்தி ரூபமாக இருக்கிறார். ஆனால் பிந்திக்கு பூஜை எப்படிச் செய்வது? பூக்கள் முதலியவற்றை எப்படிப் போடுவது? ஆகவே இந்த பக்தி மார்க்கம் நடந்து வந்துள்ளது, பூஜை செய்வதற்காகக் கோயில்களில் பெரிய வடிவமாகச் செய்து வைத்துள்ளனர்.

நல்லது, பாபா சொல்கிறார், யாருடைய புத்தியிலாவது இந்த ஞானம் பதியாமல் போகலாம், இருந்தாலும் கூட நாம் பிரம்மாகுமார் குமாரிகள், தாத்தாவுக்குப் பேரக் குழந்தைகள் - இதை நீங்கள் புரிந்து கொள்ள முடியும் இல்லையா? உயர்ந்தவரிலும் உயர்ந்தவர் சிவபகவான். அவருடைய படைப்பை காட் ஃபாதர் என்று சொல்ல மாட்டார்கள். நாம் அவருடைய பேரக் குழந்தைகள். அவர் சொல்கிறார், நான் உங்களை சொர்க்கத்தின் எஜமான் ஆக்குகிறேன். நீங்களும் அறிவீர்கள், நாம் இப்போது தமோபிரதான் கறுப்பாக இருக்கிறோம். பாபாவின் மூலம் சதோபிரதான் வெண்மையாக ஆகிக்கொண்டிருக்கிறோம். இராமரும் வெண்மையாக இருந்தார். ஆனால் கிருஷ்ணரை விட இரண்டு கலைகள் குறைவு. அவரும் இப்போது கருப்பாக ஆகிவிட்டிருக்கிறார். கிருஷ்ணர் பற்றிச் சொல்லும் போது அவரைப் பாம்பு தீண்டிவிட்டதாகச் சொல்கின்றனர். ஆனால் அதுபோன்ற விஷயம் எதுவும் இல்லை. காமச் சிதையில் அமர்வதால் கருப்பாக ஆகிவிடுகின்றனர். ஷ்யாம் மற்றும் சுந்தர் ஆகின்றனர். இப்போது மீண்டும் சதோபிரதான் ஆவதற்காக பாபாவை நினைவு செய்ய வேண்டும். ஒரு பயணி எவ்வளவு பேரை அழகாக ஆக்குகின்றார், உலகத்திற்கு எஜமான் ஆக்குகின்றார்! தந்தையாகிய என்னை நினைவு செய்யுங்கள் என்று மட்டுமே சொல்கிறார். இல்லையென்றால் ஆஸ்தி எப்படிக் கிடைக்கும்? விகர்மங்கள் வினாசமாவதற்கு யோக அக்னி வேண்டும். ஒவ்வொரு கனமும் நினைவு செய்ய வேண்டும். நிறையப் பேர் நாமோ அவருடைய குழந்தைகள் தானே என்று நினைக்கிறார்கள்: ஆனால் நாள் முழுவதும் நினைவு செய்யவில்லை என்றால் பாவ கர்மங்கள் வினாசமாகாது. குஷி அதிகரிக்காது. 20-25 ஆண்டுகள் ஞானத்தில் இருப்பவர்களுக்கும் கூட இது புத்தியில் பதிவதில்லை. மறந்து விடுகின்றனர். பிறகு பழைய உலகத்தில் சென்று அதிர்ஷ்டத்திற்குக் கோடு போட்டுக் கொண்டு விடுகின்றனர். தாய்-தந்தையர் மடியில் வருவதன் மூலம் தான் அதிர்ஷ்டம் ஆரம்பமாகின்றது. மம்மா-பாபா என்று சொல்வதன் மூலம் சொர்க்கத்திற்கு உரிமை யுள்ளவராக ஆகிவிட்டீர்கள் இல்லையா? பிரஜை களும் கூடச் சொல்கின்றனர் இல்லையா, எங்கள் இந்துஸ்தான் அனைத்தையும் விட உயர்ந்தது என்று? அட, அனைத்திலும் உயர்ந்தது என்றால் பிறகு ஏன் கடன்

வாங்குகிறீர்கள்? ஏழையாக ஏன் ஆகிறீர்கள்? இங்கிருந்து ஏராளமான செல்வத்தைக் கொண்டு சென்று விட்டனர். தொழிற்சாலைகளால் உற்பத்தி ஏற்படுகின்றது. தொழிற் சாலைகள் உருவாகவில்லை என்றால் யாருக்கும் வேலை கிடைக்காது. வேலை கிடைக்கவில்லை என்றால் (பாலனை) பராமரிப்பு எப்படிச் செய்வது? துக்கத்தில் வந்துவிட்டனர். அதனால் பாரதத்திற்காக இவ்வளவு யுக்திகள் உருவாக்கப்பட்டுள்ளன. குழந்தைகளுக்கு மிகுந்த துக்கம் இருக்கக் கூடாது என்பதற்காக இந்த யுக்தி. இங்கிருந்து எவ்வளவு பேர் வேலை செய்வதற்காக வெளி நாடு செல்கின்றனர்! ஏனெனில் அங்கே பணம் அதிகமாகக் கிடைக் கின்றது. பாபா சொல்கிறார், எனக்கோ முட்களின் மீது கூட அன்பு உள்ளது. தூய்மையில்லாத அனைவரையும் வந்து தூய்மையாக்குகின்றேன். முட்களின் மீதும் அன்பு என்றால், முள்ளிலிருந்து மலராக மாறுபவர்கள் மீதும் அன்பு உள்ளது. டிராமாவின் படி அனைவருக்கும் சத்கதி கொடுக் கின்றேன். அனைவருக்கும் சத்கதியளிப்பவர் இராம் எனவே, அனைவருக்கும் அன்பானவர் ஆகிறார் இல்லையா? அவர்களில் முட்களும் உண்டு, மலர்களும் உண்டு. விதிமுறையின் படி சொர்க்கத்தின் ஸ்தாபனை ஆகிறது என்றால் அதற்காகத் தகுதியுள்ளவர் களாகவும் ஆக்குகின்றார். சொல்கிறார்கள் இல்லையா: பதீத பாவனா வா, வந்து பாவனமாக்கு என்று? இப்போது நீங்கள் அறிவீர்கள், பதீத பாவனர் பாபா வந்திருக்கிறார். குறிப்பாக பாரதத்தை யும் பொதுவாக உலகத்தையும் தூய்மைபடுத்துகின்றார். சர்வோதயா தலைவர் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இப்படியும் தனக்குத் தான் பெயர் வைத்துக் கொள்கின்றனர்- ஸ்ரீஸ்ரீ 108 என்று சொல்லிக் கொள்கின்றனர். சர்வ என்றால் அனைவரையும் குறிப்பதாகும். எந்த ஒரு மனிதரும் அனைவருக்கும் சத்கதி அளிக்க முடியாது. நல்லது!

இனிமையிலும் இனிமையான, வெகுகாலம் கழித்து, காணாமல் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாய், தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. தேக உணர்வை மறப்பதற்காக உயிருடன் இருந்து கொண்டே இறந்த நிலையை அடைய வேண்டும். நீங்கள் இறந்தால் உலகம் இறந்து விட்டது. அடிக்கடி இந்த தேகத்திலிருந்து விலகியிருப்பதற்கான பயிற்சி செய்ய வேண்டும்.

2. நாம் தாத்தாவின் பேரக்குழந்தைகள். நாம் தகுதியுள்ளவர்களாகி, அவரிடமிருந்து முழு ஆஸ்தியைப் பெற வேண்டும். ஆத்மாவை யோக பலத்தால் தூய்மைப்படுத்த வேண்டும். குஷியில் இருக்க வேண்டும்.

வரதானம் : அசாந்தி அல்லது குழப்பங்களுக்கிடையே சாந்தி குண்டத்தின் அனுபவம் செய்விக்கும் அமைதியின் சொரூபம் ஆவீர்களாக.

ஏதாவதொரு இடத்தில் குழப்பம் ஏற்படும் பொழுது அந்த சண்டையின் நேரத்தில் அமைதியின் சக்தியின் அற்புதத்தை வெளிப்படுத்துங்கள். இங்கோ சாந்தியின் குண்டம் உள்ளது என்பது அனைவரின் புத்தியில் வந்து விட வேண்டும். சாந்தியின் குண்டம் ஆகி சாந்தியின் சக்தியை பரப்புங்கள். சாந்தி சொரூபம் ஆகி சாந்தி குண்டத்தின் அனுபவம் செய்வியுங்கள். அந்த நேரத்தில் சொல்லின் மூலமாக சேவை செய்ய

முடியாமல் இருப்பீர்கள். ஆனால் மனதின் மூலமாக சாந்தி குண்டத்தை பிரத்யட்சம் செய்ய முடியும். இங்கு தான் சாந்தி கிடைக்கும் என்று எல்லாருக்கும் (வைப்ரேஷன்) அதிர்வலைகள் வர வேண்டும். எனவே அப்பேர்ப்பட்ட வாயுமண்டலத்தை அமையுங்கள்.

சுலோகன்: ஸ்லோகன்: சுயம் தனது மற்றும் அனைவருடைய கவலைகளை (சிந்த்தா) போக்குவது தான் சுப சிந்தனையாளர் ஆவது ஆகும்.